சென்னை கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவில் வனத்துறை சார்பில் வன உயிரின வார விழாவின் துவக்க விழாவினை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து வன உயிரின வார விழா விழிப்புணர்வு தொடர்பான கையேடுகளை வெளியிட்டார். இவ்விழாவில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வனத்துறை தலைவர் சீனிவாஸ் ரா ரெட்டி மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் இயக்குநர் ஆஷிஸ் குமார் ஸ்ரீ வத்ஸவா இ.வ.பவன உயிரின காப்பாளர் மணிஷ் மீனா மற்றும் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்கள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2024-25 ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் சென்னை, ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆதம்பாக்கம், பாலகிருஷ்ணா நகரில் ரூ.5.65 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம் அமையவுள்ள இடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு ஆகியோர் களஆய்வு மேற்கொண்டனர். அருகில் மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன் மற்றும் வட்டச் செயலாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் -

அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர், அக்.5-

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (05 102024 சனிக்கிழமை) மாலை 4:00 மணிக்கு, பட்டாபிராம் ஜெய் கிரிஷ் திருமண மண்டபத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

மேலும் இக்கூட்டத்தில் மாநில ஆதிதிராவிட நலகுழுச் செயலாளர் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். முன்னதாக பகுதி கழகச் செயலாளர் ஜி.நாராயண பிரசாந்த் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணை தலைவர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் 09102024 அன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை குறித்து, கழக ஆக்க பணிகள்

இவ்வாறு திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர், அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மேற்கு மாவட்டம்

பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!

சென்னை, அக்.5-

நாமக்கல் மேற்கு மாவட்டம், பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம் குறித்து மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி ஆலோசனக் கூட்டம் நாளை (06.10.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் வேலூர், பரமத்திவேலூர் தொகுதி கழக அலுவலகம் கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர் சார்பு அணி தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தெரிவித்துள்ளார்.

மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

சென்னை விமான நிலைய ஓடுதளத்தில் பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு!

விமான நிலைய இயக்குநர் சி.வி.தீபக் பங்கேற்பு!

சென்னை, அக்.5-

சென்னை விமான நிலையத்தில் மழைக்காலத்தின் போது விமான நிலையத்தை சுற்றி உள்ள பல் வேறு பகுதிகளில் இருந்து வெளியேறும் மழை நீர் சென்னை விமான நிலைய ஓடுதளத்தில் சூழ்ந்து நிற்பதால் விமானங்கள் தரையிறங்க முடியாமல் விமான போக்குவரத்து சேவை பாதிக்கப்படுகிறது.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் பொழிச்சலூர் மற்றும் திரிசூலம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு கிராம மக்களிடம் குறைகளை கேட்டு அறிந்து மனுக்களாக பெற்றார். கூட்டத்தில் கிராம வளர்ச்சிக்காக பல் வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஊராட்சி துணைத் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கிராமப் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதேபோல இந்த ஆண்டு மழை காலத்தின் போது பாதிப்புகள் ஏற்பட்டு விமான சேவை பாதிக்கப்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையத்தை சுற்றி அமைக்கப்படும் மழைநீர் வடிகால் வாய்களை சென்னை விமான நிலைய இயக்குனர் சி.வி.தீபக் தலைமையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை விமான நிலைய நிதியின் மூலம் புதியதாக 4.00 கி.மீ தூரத்திற்கு மழைநீர் கால்வாய் அமைக்கப்படுகிறது. மழைநீர் கால் வாய்களில் உள்ள மண் போன்ற கழிவுகளை அகற்றி சுத்தம் செய்து மழை காலத்தின் போது விமான நிலைய ஓடுதளத்தில் நீர் தேங்கி நிற்காத வண்ணம் அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆய்வின் போது விமான நிலைய அதிகாரிகள் உடன் இருந்தனர்.

வாக்காளர் பட்டியல் வெளியிட்டபின் நவ. 9, 10, 23, 24 தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாமில்

புதிய வாக்காளர் சேரப்புப் பணியில் மும்முரமாக ஈடுபடுவீர்!

காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், அக்.5-

tருகிற அக்டோபர் 29-ஆம் தேதி வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன் நவம்பர் 9, 10, 23, 24 ஆகிய 4 நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாமில் புதிய வாக்காளர்களை சேர்த்திடும் முக்கிய பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர் என காஞ்சி வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு :-

தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகிற அக்டோபர் 29-ஆம் தேதி திருத்தம் செய்யப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டவுடன், நவம்பர் 9, 10, 23, 24 ஆகிய 4 நாட்கள் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாமில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில், புதிய வாக்காளர்களை சேர்க்கும் முக்கிய பணியில் வார்டு - கிளைக் கழக செயலாளர்கள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் அனைவரும் இணைந்து, அவரவர் பாகங்களில் புதிய வாக்காளர்களை சேர்க்கும் இன்றியமையா பணியில் முனைப்புடன் ஈடுபட வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையம் எதிர்வரும் 2025 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக திருத்தம் செய்யப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29-ஆம் தேதி அன்று வெளியிடப்பட உள்ளது. அன்றைய தினமே வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகளும் தொடங்கும்.

வருகிற அக்டோபர் 29-ஆம் தேதியன்று, காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டவுடன், நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 28.ஆலந்தூர், 29. திருப்பெரும்புதூர், 30.பல்லாவரம், 31.தாம்பரம், 32. செங்கல்பட்டு, 33. திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர்களிடம் இருந்து மாவட்டக் கழகம் பெற்று, சட்டமன்ற தொகுதி வாரியாக, அந்தந்த ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்களிடம் உடனே பிரித்து வழங்கப்படும்.

வரைவு வாக்காளர் பட்டியலை பெற்ற, அந்தந்த ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள், அந்தந்த பாகத்திற்குரிய வார்டு-கிளை கழக செயலாளர்கள் மூலம் வழங்கி, அந்தந்த வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA-2) வசம், கிளைக் கழக செயலாளர்கள் ஒப்படைத்திடுவார்கள்.

வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்காளர் பட்டியலை பிரித்து அந்த பாகத்தில் உள்ள தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழகத்தினருடன் இணைந்து வீடு வீடாகச் சென்று உடனடியாக வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் முக்கிய பணியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் சுருக்க முறை, திருத்தம் செய்யும் பணிகள் வருகிற அக்டோபர் 29-ஆம் தேதி தொடங்கி, நவம்பர் 28-ஆம் தேதி வரை நடைபெறும்.

வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் - இடம் மாறிய வாக்காளர்கள் பெயர்களை சேர்த்தல், இறந்த - இடம் மாறிய வாக்காளர்கள் பெயரை நீக்கம் செய்தல், பெயர் - முகவரி மாற்றம் செய்யும் பணிகள் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம் 6, 6-பி, 7, 8 ஆகிய படிவத்தில் பூர்த்தி செய்து, அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் தந்திட வேண்டும்.

தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 2025-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி அன்று, 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் - வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான முதல்கட்ட சிறப்பு முகாம், வருகிற 9.11.2024 சனிக்கிழமை, 10.11.2024 ஞாயிற்று கிழமை, ஆகிய 2 நாட்களும், இரண்டாவது கட்ட சிறப்பு முகாம் 23.11.2024 சனிக்கிழமை, 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய 2 நாட்களும், ஆகமொத்தம் 4 நாட்கள் சிறப்பு முகாம். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மாவட்டம் முழுவதும் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மாவட்டம் முழுவதும் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் அந்த 4 நாட்களிலும், புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், புதிதாக குடி பெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களை சேர்க்கும் பணியிலும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யும் பணியிலும்,

அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA-2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இணைந்து இரு கரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வருகிற 2026-சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் இச்சிறப்பு பணியில் மாநகர-பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நேரில் சென்று, கழகத்தினர், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் இணைந்து இப்பணியை சிறப்பாக செய்கிறார்களா என்பதை கண்காணிப்பு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்று மேலும் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் சேர்த்தல்-நீக்கல்-திருத்தம் செய்யும் பணிகள் வருகிற நவம்பர் 28-ஆம் தேதி நிறைவடையும்.

வருகிற 2025-ஆம் ஆண்டு ஜனவரி 6-ஆம் தேதி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாரியாக 2025-ஆம் ஆண்டிற்கான இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி ஊராட்சி சிலுவைப்பட்டி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூபாய் 3.70 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 56 புதிய குடியிருப்புகளை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, பயனாளிகளுக்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வீட்டின் சாவிகளை வழங்கினார். அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், பஞ்சாயத்து தலைவர் சரவணக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.